**அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ''ஏ'' இன் 2013**

---

அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ''ஏ'' இன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 1979 யூன் 01 ஆம் திகதிய 38/19 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பகுதி 1: பிரிவு (1) இன் பந்தி 9 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ''ஏ'' இன் நிலைவரம் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுப் குறைபாடுகள்**

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 30,034 தொகையான நிலையான சொத்துக்கள் முதிர்ச்சியில் முலதனமாக்கப்பபடாமை காரணமாக குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீட்டுத் தவறு காரணமாக மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி மற்றும் பெறவேண்டிய வட்டி என்பன முறையே ரூபா 19,317 மற்றும் ரூபா 54,837 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ரூபா 138,687 தொகையான அசாதாரண வரவு மீதி சீராக்கப்படாமல் ஐந்தொகை திகதியில் செலுத்த வேண்டிய வரிக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சேமலாப நிதியம் ''ஏ'' மற்றும் ''பீ'' இன் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட தனிப்பட்ட மீதிக்கும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 11,140,713 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்தொகை திகதியில் உள்ளவாறு ரூபா 33,544,679 தொகையான பல ஆண்டுகளாக திரண்டிருந்த நிதியத்திற்கான வருடாந்த வங்கி பங்களிப்புகள் நிதியத்தில் சீராக்குவதற்குப் பதிலாக பெறவேண்டியவையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2004 இலிருந்து தொங்கல் கணக்கில் (முன்னாள் உறுப்பினர்கள்) இருந்த மீதியை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் ரூபா 18,268 தொகை காட்டப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் நிதியத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 5,663,546 தொகையான மிகையை

முன்னைய ஆண்டிற்கான ரூபா 6,390,735 ஆன நேரொத்த மிகையுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 727,189 அல்லது 11.37 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. மீளாய்வாண்டிற்காக ரூபா 842,105 ஆல் வங்கியின் குறைநிரப்பு பங்களிப்புகளின் குறைவே இந்த எதிர்மறையான போக்கிற்கான பிரதான காரணமாக இருந்தது.

## 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, நிதியத்தின் கடந்த 04 ஆண்டுகளில் செயற்பாடுகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான வைப்புக்கள், உறுப்பினர்களிற்கான கடன்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் மீதான வட்டி வருமானம் | 1,013,264 | 844,336 | 1,250,822 | 2,103,734 |
| வங்கியின் குறைநிரப்பு பங்களிப்பு | 5,222,951 | 6,065,056 | 5,271,604 | 5,514,266 |
| மொத்த வருமானம் | 6,236,215 | 6,909,392 | 6,522,426 | 7,618,000 |
| செலவினம் | (572,669) | (518,657) | (599,455) | (703,070) |
| ஆண்டிற்கான மிகைகள் / (பற்றாக்குறை) | 6,663,546 | 6,390,735 | 5,922,971 | 6,914,930 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) 2010 - 2012 ஆண்டு காலத்தின் போது நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் ரூபா 1,714,287 இலிருந்து ரூபா 381,171 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், இந்த வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 7,753,386 ஆல் நிலையான வைப்புக்கள் மீதான முதலீடுகள் அதிகரித்ததன் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 381,171 இலிருந்து ரூபா 647,793 வரை அல்லது 69.9 சதவீதம் அதிகரித்திருந்தது.

(ஆ) 2010 முதல் 2011 வரையான காலப்பகுதியின் போது உறுப்பினர்களிற்கான கடன்கள் மீதான வட்டி வருமானம் ரூபா 389,447 இலிருந்து ரூபா 444,107 வரை அல்லது 14 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இருந்த போதிலும், உறுப்பினர்களால் கடன்களின் தீர்ப்பனவின் விளைவால், 2011 முதல் 2013 வரையான காலத்தின் போது ரூபா 444,107 முதல் ரூபா 286,531 வரை அல்லது 35 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.2.2 உறுப்பினர்களின் உதவுதொகை

கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் பங்களிப்புகள் மற்றும் நிதியத்திலிருந்து பெறப்பட்ட வட்டி என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2013 | | | | 2012 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உறுப்பினர்களின் பங்களிப்பு | வங்கி உதவு தொகை | செலவு வைக்கப் பட்ட வட்டி | மொத்தம் | உறுப்பினர்களின் உதவுதொகை | வங்கி உதவு தொகை | செலவு வைக்கப் பட்ட வட்டி | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 6,608,425 | 9,909,385 | 33,583,116 | 50,100,926 | 7,764,015 | 11,641,635 | 41,943,498 | 61,349,149 |
| கூட்டு | | | | | | | | |
| ஆண்டின் போதான பெறப்பட்ட பங்களிப்புகள் | 740,960 | 1,111,441 | 5,663,546 | 7,515,947 | 901,866 | 1,352,803 | 6,390,735 | 8,645,404 |
| மொத்தம் | 7,349,385 | 11,020,826 | 39,246,662 | 57,616,873 | 8,665,881 | 12,994,438 | 48,334,233 | 69,994,553 |
| கழி: | | | | | | | | |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் | (1,558,360) | (2,336,868) | (9,574,521) | (13,469,749) | (2,057,456) | (3,085,053) | (14,751,117) | (19,893,626) |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 5,791,025 | 8,683,958 | 29,672,141 | 44,147,124 | 6,608,425 | 9,909,385 | 33,583,116 | 50,100,927 |

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2013 ஆம் ஆண்டில் நிதியத்திற்கான உறுப்பினர்களின் பங்களிப்பு ரூபா 160,906 அல்லது 18 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் வங்கி உதவுதொகையும் உறுப்பினர்களின் உதவுதொகைக்கு இணைவாக ரூபா 241,362 அல்லது 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா 6,423,877 அல்லது 32.29 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.2.3 உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள்

(அ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | |
|---|---|---|
| | 2013 | 2012 |
| | ரூபா | ரூபா |
| சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 4,895,657 | 7,858,104 |
| கூட்டு: | | |
| ஆண்டின் போது உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் | 1,950,000 | 925,000 |
| உறுப்பினர்களிற்கு செய்யப்பட்ட மேலதிக தீர்ப்பனவு | - | 26,836 |
| | 6,845,657 | 8,809,940 |
| கழி: | | |
| ஆண்டின் போதான அறவீடுகள் | (2,234,772) | (3,914,283) |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 4,610,885 | 4,895,657 |

உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,025,000 அல்லது 111 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ஆனால், 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,679,511 அல்லது 43 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) ரூபா 1,950,000 தொகையான பின்வரும் கடன்கள் அவர்களுடைய ஓய்வூதிய திகதியை கருத்திற்கொள்ளாமல் உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது.

| ஊழியர் இலக்கம் | கடன் வழங்கப்பட்ட திகதி | வழங்கப்பட்ட தொகை ரூபா. | ஓய்வூதிய திகதி | மீளச்செலுத்தும் காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 99 | 2013.02.12 | 1,600,000 | 2015.12.28 | 10 ஆண்டுகள் |
| 88 | 2013.06.05 | 200,000 | 2015.03.10 | 10 ஆண்டுகள் |
| 88 | 2013.10.10 | 100,000 | 2015.03.10 | 10 ஆண்டுகள் |
| 96 | 2013.07.16 | 50,000 | 2015.04.06 | 10 ஆண்டுகள் |
| | | 1,950,000 | | |

## 4. கணக்களி பெறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தலிலுள்ள தாமதம்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04.3 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 2 மாதங்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க

வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 04 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**4.2 நிதியத்தின் ஸ்தாபிப்பு, அதிகாரம் மற்றும் நோக்கங்கள்**

1975 இன் 13 ஆம் இலக்க இலங்கை அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 85(2) ஆம் பிரிவின் பிரகாரம் அரச ஈட்டு முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ''ஏ'' தாபிக்கப்பட்டிருந்தது. 1975 இன் 13 ஆம் இலக்க இலங்கை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 85(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாதாந்த அல்லது நாட் சம்பளம் கொடுக்கப்படும் சகல ஊழியர்களும் இலங்கை அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஊழியர்களாக கருதப்படுவதுடன் வங்கியில் அவர்களின் தொழில் புரிவதற்கான நிபந்தனையாக சேமலாப நிதியம் - ''ஏ'' யின் உறுப்பினர்களாவதுடன் அரச ஈட்டு, முதலீட்டு வங்கியின் ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர். அத்துடன் நிதியமானது, பணிப்பாளர் சபை பொது முகாமையாளர் அல்லது அவருக்காக அந்த நேரத்தில் பதில் கடமையாற்றும் நபரினால் வருடாந்தம் நியமிக்கப்படும் வங்கியின் பணிப்பாளர்களால் நியமிக்கப்படும் ஊழியர்களைப் கொண்ட இரண்டு பணிப்பாளர்கள், மற்றும் ஊழியர்களைக் கொண்ட நிதியத்தின் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட முகாமைத்துவக் குழுவின் மூலம் நிதியத்தின் கட்டுப்பாடு, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் என்பன மேற்கொள்ளப்படுகின்றது.